தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்

* 31 வின.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு பென்ஷன் கொடுக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இத்தகைய செயற் குறிப்பு எதுவும் தற்போது இந்த அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இன்று பரிசீலனையில் இல்லை என்று சொன்னாலும், இனிமேலாவது அது பரிசீலனையில் எடுக்கப்பட்டு அதன்படி செய்வதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை, மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படும் பிரச்னை. இந்தப் பென்ஷன் கொடுக்கும் திட்டத்தைப் பற்றி மத்திய அரசினர் பரிசிலித்து வருகிறார்கள். மாநில அரசின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட பின்னல் முடிவு எடுக்கப்படும்.

DR. H. V. HANDE : Mr. Speaker, may I know whether the State Government have given any advice to the Central Government with regard to pension to the industrial workers?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது வரையில் அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை. அது பற்றி நாங்களே மத்திய அரசாங்கத்திற்கு எழுதுவதாக முடிவு செய்திருக்கிறோம். எழுதி அவர்களுடைய கருத்து தெரிந்தவுடன் இந்த அரசாங்கத்தின் கருத்தைத் தெரிவிக்கப்படும்.

திரு. கே. பி. எஸ். மணி : சார், பென்ஷன் கொடுக்கும் அறிகுறி இல்லையென்றாலும், சிறு சிறு தொழிற்சாலையாக இருந்தாலும், கட்டாய இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை அமல் நடத்த அவர்களை அரசாங்கம் நிர்ப்பந்திக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. ஸ்கீம் என்று இருக்கிறது. குறிப்பாக, எந்தத் தொழிற்சாலையைப் பற்றியாவது உறுப்பினர் அவர்கள் கேட்டால் பதில் அளிக்கப்படும்.

பஞ்சாயத்து வரிப்பணம் வசூல்

* 32 வின.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து வரிப் பணத்தை வசூலிக்க கிராம கர்ணம்,-களுக்கு தனியாக மாதம் எவ்வளவு கொடுக்கிறார்கள் ?